**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 15 /2020**
**U/s. 294(b),323,324,506(2),341 of IPC**
**PROSECUTION WITNESS NO. 2 (LW. 3 )**

| | | |
|---|---|---|
| **Name** | : ஆனந்த் | |
| **Father's/Husband Name :** | | **Occupation :** |
| **Address** | : | **Age : /2025** |

எதிரி ஆஜர்.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No. 15/2020 31.10.2025</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.15 FN**

**<u>முதல் விசாரணை:</u>**

**1.**நான் தற்போது தஞ்சாவூர் கீழவாசலில் குடியிருந்து சலூான் கடை நடத்தி வருகிறேன். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது. சாட்சியை கிழக்கு காவல் நிலைய முதல்நிலை காவலர் திரு. மணியரசன் அவர்கள், நீதிமன்றத்தில் அடையாளம் காண்பித்தார்.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 09.09.2019 ம் தேதி இரவு 8.00 மணிக்கு என் கடையில் இருந்ததாகவும் அப்போது என் கடைக்கு எதிரே தண்ணீர் பந்தல் கிட்ட நடந்து போன சிவராமராவ்வை வாசு மற்றும் எனக்கு தெரிந்த கீழவாசல் கனி என்கிற அருண் மற்றும் வடக்குவாசல் ஆறுகுட்டி என்கிற ஆறுமுகம் ஆகியோர் வழிமறித்து அருவருக்கதக்க வார்த்தையால் திட்டியதாகவும், நீ என்னடா பெரிய ரவுடி மாதிரி சுத்துரு என்று திட்டியதாகவும், அசா1யை கையால் அடித்தாகவும், அசா1 சத்தம் போட ஆறுகுட்டி என்கிற ஆறுமுகம் இடுப்பில் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து அசா1ன் முதுகில் அருவாளால் வெட்டியதாகவும் , இரத்த காயம் ஏற்பட அசா1 சத்தம் போட எதிரிகள் உன்னை கொல்லாமல் விட மாட்டேன் என்று மிரட்டியதாகவும், அசா1ன் இடுப்புக்கு மேலே முதுகில் வெட்டுப்பட்டு இரத்தவந்தபடி இருந்ததாகவும், அசா1ன் அப்பாவுக்கு போன் மூலம் தகவல் சொன்னதாகவும், அசா1ன் அப்பா கணேசன் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் , அசா1 புகார் கொடுத்ததாகவும் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம்

எதிரிக்கு பயந்து எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :இல்லை**</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்**- S.T. **கனிமொழி**.,L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.